குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண். 9/2024

ம.சா. 1

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 22-ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில் | |
| தந்தை பெயர் | ராமலிங்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.04 மணி,

Complainant Saravanan present. Advocate Mr.Sanchukumar present for Complainant. Accused Prabhakaran present. Advocate Mr.Geminishankar present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எனது முந்தைய விசாரணையில் ஆஜர் எதிரி பூர்த்தி செய்த காசோலையை எடுத்து வந்ததாகவும், என்னிடம் பேனா வாங்கி கையொப்பம் இட்டு கொடுத்தார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி காசோலையை பூர்த்தி செய்துவிட்டு என்னிடம் வந்து பேனா வாங்கி பூர்த்தி செய்த காசோலையில் கையொப்பம் செய்ய அவசியம் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கை தவிர வேறு எந்த காசோலை வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் நான் தாக்கல் செய்யவில்லை. காசோலையை வங்கியில் செலுத்தும் சலானை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நான் நகை கடை வைத்துள்ளதால் அது தொடர்பாக வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனது வருமானம் தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஏலச் சீட்டு நடத்தி வரவில்லை. 2016 ம் வருடம் எனது பங்குதாரர்களுடன் சேர்ந்து ஏலச் சீட்டு நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. வட்டிக்கு பணம் கொடுக்கும் நிதி நிறுவனங்களில் நான் பங்குதாரராக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. கடந்த 2016 ம் ஆண்டு ஆஜர் எதிரி முத்துநாயக்கன்பட்டியல் மருந்தகம் வைத்திருந்தது எனக்கு தெரியும். ஆஜர் எதிரி என்னிடம் பணம் கேட்பதற்கு 6 மாதத்திற்கு முன்னதாக முத்துநாயக்கன்பட்டியில் இருந்து அவரது கடையை காலி செய்து கொண்டு மல்லமூப்பம்பட்டிக்கு சென்றுவிட்டார் என்பது தெரியும்.

3. 2016 ம் ஆண்டு ஏலச்சீட்டு நடத்தி வந்ததாகவும், ஆஜர் எதிரி மேற்படி ஏலச்சீட்டில் ரூ.1,00,000/- மதிப்புள்ள 2 சீட்டுகளில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஏலச்சீட்டுகளின் படி 4 மாதங்களில் 1 சீட்டும், 3 மாதங்களில் 1 சீட்டும் எடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஏலச்சீட்டுகளின் தவணையை ஆஜர் எதிரி சரியாக செலுத்ததால் கடந்த 2020 ம் ஆண்டு சமாதான பேச்சு வார்த்தையின் அடிப்படையில் ரூ.1,20,000/- மொத்தமாக எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி ஏலச்சீட்டுகளின் அடிப்படையில் தரவேண்டிய மொத்த தொகை ரூ.1,20,000/- நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல.

4. ஆஜர் எதிரி என்னிடம் பணம் வாங்குவதற்கு சுமார் 6 மாதத்திற்கு முன்பாக முத்துநாயக்கன்பட்டியில் இருந்து காலி செய்தார் என்றால் சுமாராக 6 மாத கால இருக்கும். ஆஜர் எதிரி முத்துநாயக்கன்பட்டியில் இருந்து காலி செய்து சென்ற காலத்தை என்னால் சரியாக சொல்ல முடியாததால் நான் சொல்லியபடி அவர் காலி செய்து சென்றதுக்கு 6 மாதத்திற்கு முன்பு பணம் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றாலும் கடந்த 2016 ம் ஆண்டு ஏலச் சீட்டு தொகைக்காக வாங்கிய காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. காசோலையை வங்கியில் செலுத்திய போது Account Blocked என்ற காரணத்தோடு காசோலை திருப்பப்பட்டது. முத்துநாயக்கன்பட்டியில் இருந்து ஆஜர் எதிரி சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னதாகவே சென்றுவிட்டதால் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கை பராமரிக்காமல் விட்டதால் அவருடைய வங்கி கணக்கு Account Blocked ஆகிவிட்டதால் நான் சொல்கின்ற சமயத்தில் வங்கி கணக்கு முடக்கப்பட்டது தெரிந்தே வழக்கு காசோலையை ஆஜர் எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏலச் சீட்டு நடத்தி வந்ததின் அடிப்படையில் ஆஜர் எதிரி பிணையமாக எனக்கு கொடுத்த பூர்த்தி செய்யப்படாத காசோலையை கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. 2020 ம் ஆண்டு ஏலச் சீட்டிற்காக கொடுக்க வேண்டிய மொத்த பணம் ரூ.1,20,000/- ம் கொடுத்த பின்பு சட்ட அறிவிப்பை அனுப்பியதால் ஆஜர் எதிரியின் சகோதரர் என்னிடம் வந்து கேட்டதற்கு ஏற்கனவே கொடுத்த பணம் அசல் தொகைக்கானது என்றும் தற்போது இந்த வழக்கு காசோலை வட்டிக்கானது என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. 2020 வருடத்தில் இருந்து 4 வருடத்திற்கு முன்பாக அசலைப் பெற்றுக் கொண்டு காலதாமதத்தின் அடிப்படையில் வட்டித் தொகைக்கு இந்த காசோலையை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் சொல்வது போல் ஆஜர் எதிரி என்னிடம் இருந்து எந்த கடனும் பெறவில்லை என்றாலும் திருப்பி செலுத்தவேண்டியதும் இல்லை என்றாலும்

சரியல்ல. பிணையமாக சுமார் 6 வருடத்திற்கு முன்பு கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.29 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.